JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Rw-1- Witness
for Prosecution

MC No. 5/2023 Crime No. - Station -

| Name | Rw1– சரவணன் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.07.2026 | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தமிழ்நாடு மின்வாரியத்தில் கணக்கீட்டாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி மின்வாரியத்தில் என்னுடைய மாத சம்பளம் எவ்வளவு என்றால் மொத்தம் சம்பளம் ரூ.78,100/– பிடித்தம் போக ரூ.24,478/– கையில் கிடைக்கும். எனக்கு எந்தெந்த கடன்களுக்காக நான் வேலை செய்யும் மின்சார வாரியத்தில் சம்பளத்தை பிடிக்கிறார்கள் என்றால் நான் கூட்டுறவு வங்கியில் வைத்துள்ள நகை கடனுக்கு ரூபாய்12,837/– பிடிக்கிறார்கள். சம்பளத்தில் எல்ஐசி, சிபிஎஸ், ஸ்டார் ஹெல்த் ரூ.19,722/– பிடித்துக் கொள்கிறார்கள்.மேலும் நான் வாங்கிய வீட்டுக் கடனுக்கு ரூ.17,922/– பிடிக்கிறார்கள். மேலும் நான் வண்டி வாங்கியதற்கு ரூ.4,422/– பிடித்துக் கொள்கிறார்கள். நான் வாங்கிய வீட்டுக் கடன் மற்றும் வண்டிக் கடனுக்கு நான் பணிபுரியும் மின்சார வாரியத்தில் பணம் பிடிப்பது இல்லை என்றால் சரிதான்.

அவை நான் தனியாக வீட்டு தேவைக்காக வாங்கிய கடன்கள் ஆகும். எனக்கு நான் பணிபுரியும் மின்வாரியம் போக வீட்டு வாடகையில் இருந்தும் எவ்வளவு வாடகை பணம் வருகிறது என்றால் மாதம் ரூ.8,500/– வருகிறது. நான் எத்தனை வருடங்களாக எனது வீட்டை வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் நாலு வருடங்களாக விட்டு உள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் நான் எனது வீட்டை வாடகைக்கு விடும்போது ஆரம்ப காலகட்டத்தில் ரூபாய் ரூ.8500/– க்கு வாடகைக்கு விட்டேன் என்றாலும் தற்போது எனக்கு வாடகை பணம் ரூபாய் 10 ஆயிரத்திற்கு மேல் வரும் என்றால் சரியல்ல.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.17 11:19:57 +0530

எனது மகள் மற்றும் மனைவி என்னை விட்டு பிரிந்து போன பின்னர் நான் இரண்டு வருடங்கள் மட்டும் தான் எனது மகளுக்கு தேவையான கல்வி கட்டணம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. மூன்று வருடங்களாக செலுத்தி வருகிறேன். தற்போது வரை கல்வி கட்டணம் நான் செலுத்தியுள்ளேன். எனது மனைவி மற்றும் மகள் என்னை விட்டு பிரிந்ததற்கு பின்னிட்டு ஒரு வருடம் மட்டும் எனது மகளின் கல்வி கட்டணத்தை நான் கட்டவில்லை என்றால் சரிதான். எனது மகள் எந்த பள்ளி என்பது கூட எனது மனைவி தெரிவிக்காததால் நான் கட்டவில்லை.

இந்த நீதிமன்றம் என்னை பணம் கட்ட சொன்ன பின்பு தான் நான் பணத்தை எனது மகளின் கல்விக்காக செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் எனது மகளின் கல்வி கட்டணம் மட்டும் தான் செலுத்தி வந்தேன் என்றாலும், எனது மனைவி மற்றும் மகளுக்கு தேவையான உணவு உடை போன்றவற்றிற்கு எந்த ஒரு பணமும் நான் கொடுத்தது இல்லை என்றால் சரியல்ல. எனது மகளுக்கு அவ்வப்போது தேவைப்படும்போது எனது வங்கி கணக்கில் இருந்து 5000 அல்லது 10,000 வரை பணம் கொடுப்பேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய தனிப்பட்ட செலவிற்கு மாதம் ரூபாய் 15,000 தேவைப்படுகிறது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

எனக்கு மாதம் ரூபாய் 15,000 தேவைப்படுவது போல் எனது மனைவி மற்றும் மகளுக்கு மாதம் 30,000 தேவைப்படும் என்றால் அவ்வளவு எனது மனைவி மற்றும் மகளுக்கு தேவைப்படாது மேலும் எனது மனைவி மற்றும் மகள் என்னுடன் இருந்தால் அவர்களுக்கு தேவையான அனைத்தும் நான் செய்து தருவேன். நான் மாண்புமிகு பவானி சார்பு நீதிமன்றத்தில் எனது மனைவியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று பரிகாரம் கேட்டு HMOP 182/2023 மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவை நான் திரும்ப பெற்று விட்டேன் என்றால் சரிதான்.

எனது மனைவி எந்த பதிலும் கொடுக்கவில்லை என்பதாலும் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று தெரிவித்ததால் நான் மனுவை திரும்ப பெற்றுக் கொண்டேன் நான் சொல்வது தவறு என்றாலும் நான் தான் சேர்ந்து வாழ கோரி பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்தேன் என்றாலும் நானே வேண்டுமென்று எனது மனுவை திரும்ப பெற்றுக் கொண்டு விட்டேன் என்றால் சரியல்ல. எனது மனைவி சமரச மையத்திற்கு வந்து என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று தெரிவித்ததாலும் மனுவை திரும்ப பெற்றுக் கொண்டு விட்டேன். நான் சொல்வது தவறு என்றாலும் எனது மனைவி அவ்வாறு நான் சொல்வது போல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் எனது மனைவி மீது விவாகரத்து கோரி பவானி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் நான் எனது மனைவியின் மீது விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த வழக்கு இன்னும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவி மற்றும் மகள் மேட்டூர் தாலுக்கா கொளத்தூரில் தனியாகத்தான் வசித்து வருகிறார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.17 11:20:03 +0530

மனைவி மற்றும் மகள் எங்கு இருக்கிறார்கள் என்று கூட எனக்குத் தெரியாதா என்றால் கொளத்தூரில் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் ஆனால் யாருடன் இருக்கிறார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது. எனது மனைவிக்கு தனிப்பட்ட முறையில் எந்த வருமானமும் கிடையாது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது மகள் அவ்வப்போது என்னை வந்து சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறார் என்றால் சரிதான். நான் எனது மகளிடம் எனது மகள் மற்றும் மனைவி யாருடன் வசித்து வருகிறார்கள் என்பது குறித்து எதுவும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

எனது மாமனார் மற்றும் மாமியார் கொளத்தூரில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் தனியாக தோட்டத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின்னிட்டு எனது மாமனார் மற்றும் மாமியார் எங்கு வசித்து வருகிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவிக்கு சகோதரர் ஒருவர் உள்ளார் என்கிற விவரம் எனக்கு தெரியும் என்றால் தம்பி உள்ளார் என்று எனக்கு தெரியும் ஆனால் அவரைப் பற்றி விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும் எனது மனைவியின் சகோதரன் கூட தான் எனது மாமியார் மற்றும் மாமனார் தனியாக தோட்டத்தில் உள்ளார்கள் என்றாலும் எனது மனைவி மற்றும் மகள் தனியாக உள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் எனது மனைவிக்கும் ஏற்பட்ட திருமணம் காதல் திருமணம் என்பதால் என்னை அவர்கள் வீட்டில் தற்போது வரை ஏற்றுக் கொள்ளவில்லை.

திருமணத்திற்கு பின்னிட்டு எனது மனைவியின் படிப்புச் சான்றிதழ்களை அவரது வீட்டில் இருந்து எடுத்து வரச் சொல்லி நான் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் எனது மனைவியை வேலைக்கு போக வேண்டாம் என்று சொன்னேன் என்றால் நான் எனது மனைவியை கட்டாயப்படுத்தவில்லை. எனது மனைவியும் தற்போது வரை வேலைக்கு போவதாக என்னிடம் சொன்னது இல்லை. எனது மனைவியை நான் ITI சேர்த்தேன் என்றால் எனது மனைவியிடம் நான் படிக்க வைப்பதற்காக கேட்டேன் ஆனால் எனது மனைவி இரு சக்கர வாகனம் வேண்டும் என்று என்னிடம் கேட்டதால் மேலும் மேற்படி கல்லூரி 10 கிலோமீட்டர் தொலைவில் இருப்பதால் நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நான் சொல்வது தவறு என்றாலும் நான் மேற்படி கல்லூரியில் எனது மனைவியை சேர்த்து விட்டு வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது மனைவியை சேர்க்கவே இல்லை.

எனது மனைவியின் கல்வி சான்றிதழ் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் யார் யாரிடம் கடன் வாங்கி உள்ளேன் என்றால் வெங்கடேஷ் என்பவரிடம் பணம் வாங்கினேன். அந்த பணத்தையும் நான் வெங்கடேஷ்-க்கு திரும்ப செலுத்தி விட்டேன். தற்போது நான் வெளியே வாங்கிய கடன்கள் அனைத்தும் செலுத்தி விட்டேன் என்றால் சரிதான். எல்ஐசி பாண்டு வைத்து பணம் வாங்கி இருந்தேன் அதில் இன்னும் 70 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டி உள்ளது. நான் எனது மனைவி பேரில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.17 11:20:08 +0530

மேட்டூரில் நாலு சென்ட் இடம் வாங்கியதாக சொல்லப்படும் இடத்திற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் மேட்டூர் நகராட்சியில் வீட்டு வரி, குடிநீர் வரி, மின்சாரம் போன்றவை எனது மனைவியின் பெயரில் தான் உள்ளது. மேற்படி இடத்திற்கான பத்திரம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது மனைவி என்னை விட்டு செல்லும்போது அனைத்தையும் எடுத்துச் சென்று விட்டார். எனது மனைவியின் பெயரில் வாங்கியதாக சொல்லப்படும் நாலு சென்ட் இடம் புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல.

நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி நிலம் புறம்போக்கு நிலம் என்பதால் அதனால் தான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்ய செல்லவில்லை எனது மனைவி தான் சென்றார். எனது மனைவி அவரது பூர்விக சொத்தை எனது மாமனார் பெயருக்கு எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். நான் அடிக்கடி மது அருந்திவிட்டு எனது மனைவியை அடிப்பதும் கெட்ட வார்த்தைகள் திட்டுவதும் எனது மகளின் முன்பு எனது மனைவியை அநாகரிகமாக பேசியதால் தான் எனது மனைவி என்னை விட்டு பிரிந்து சென்றார் என்றால் சரியல்ல.

நான் மது அருந்துவேன். ஆனால் எனது மனைவியை அடிப்பது எனது மகளின் முன்பு எனது மனைவியை கெட்ட வார்த்தைகள் பேசுவதோ என்று எதுவும் செய்ததில்லை. எனது மனைவியும் மகளும் தனியாக வாடகை வீட்டில் வசித்த போது நான் மது அருந்திவிட்டு மேற்படி வீட்டின் கதவு போன்றவற்றை உடைத்தேன் என்பதால் மேற்படி வீட்டில் உரிமையாளர் என்னை சமாதானப்படுத்தி அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. அப்போது அந்த வீட்டின் உரிமையாளர் எனது மனைவியிடம் உங்களது கணவர் அடிக்கடி வந்து இனிமேல் பிரச்சனை செய்வார் அதனால் நீங்கள் மேட்டூர் சென்று விடுங்கள் என்று எனது மனைவியிடம் கூறினார் என்றால் சரியல்ல. எனது தவறான நடவடிக்கையால் தான் எனது மனைவி என்னுடன் வாழாமல் பிரிந்து வாழ்கிறார் என்றால் சரியல்ல எனது மனைவி மற்றும் மகளுக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.17 11:20:14 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**